## பொலன்னறுவை மா நகர சபை
## பொலன்னறுவை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 மார்ச் 20 முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 24 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூலை 03 ஆந் திகதிசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பொலன்னறுவை மா நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| களஞ்சியப் பொருட்கள் தொடர்பில் முற்பணக் கணக்கு முறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | களஞ்சியப் பொருட்கள் தொடர்பில் முற்பணக் கணக்கு முறை பின்பற்றப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு முதல் அதனை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கபபட்டுள்ளது. |

#### (ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டினுள் புலதிசி அறிவுச் சபையின் வாசிகசாலைக்கு (“e-Library”) அலுமினியம் தடுப்பொன்றினை தயாரிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,137, | நிலையான சொத்துக்களுக்காக செலவிடப்பட்ட பணம் மூலதனமாக்கப்பட வேண்டியமை. | சொத்துக்கள் வரவு மற்றும் திரண்ட நிதியம் செலவு வைக்கப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | 916 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | மீளாய்வாண்டினுள், பணிகள் நிறைவு செய்யப்பட்டு பணம் செலுத்தி முடித்த 02 செயற்திட்டங்களின் பெறுமதியான ரூபா 399,841 தொகை தொடர்ந்தும் தொழிற்சாலை கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் திருத்தப்பட வேண்டும். | கடன் கொடுத்தோரின் வரவு மற்றும் திரண்ட நிதியம் செலவு வைக்கப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | காலப்பகுதியின ஆரம்ப நிலுவை நீதிமன்ற தண்டப்பணங்களின் மீதி ரூபா 2,573,110 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த சீராக்கங்களை 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iv) | 2018 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்திற்குரிய பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 594,817 தொகை கணக்கு வைக்கப்பட்டிராததுடன், ஏப்ரல் முதல் திசெம்பர் வரையிலும், எனைய மாதங்களுக்குரிய பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிலிருந்து முன்னோக்கி இந்த மீதிகளை சீராக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (v) | தமன்கடுவ பிரதேச சபைக்குரியதாக பொலன்னறுவை மா நகர சபைக்கு கிடைத்த பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 5,970,691 இல் பொலன்னறுவை பிரதேச சபைக்கு ரூபா 1,351,764 ஆன செலுத்த வேண்டிய மீதிகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கு வைக்க முடியாதென்பதை தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | தம்மன்கடுவ வாரச்சந்தை மற்றும் புதிய வியாபாரக் கட்டிடத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தில் மின்தூக்கியை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 5,227,336 ஆன தொகை மூலதனமாக்கப்பட்டிராததுடன், அதற்காக கிடைத்த நிலுவை நீதிமன்ற தண்டப்பணத்தில் மாநகர சபைக்குரிய பெறுமதியான ரூபா 4,043,867 இல் ரூபா 3,300,512 தொகை நிலுவை நீதிமன்ற தண்டப்பண கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு வைக்க வேண்டும். | ரூபா 5,227,336 ஆன தொகை சொத்துக்கள் வரவு, பி.ஈ.ஆ.தா. கணக்கிற்கு செலவு வைப்பதற்கும்,ரூபா 3,300,512 தொகையான பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பண கணக்கு வரவு, திரண்ட நிதியக் கணக்கு செலவு வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (vii) | 2018 ஆம் ஆண்டிற்குரியதாக பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கு வைக்க வேண்டும். | தகவல் கிடைத்த பின்னர் அறிக்கையிடுவதற்கு பதிவு செய்கின்றேன். |
| (viii) | மா நகர சபைக்குரிய 07 காணி மற்றும் கட்டிட உருப்படிகளின் பெறுமதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கு வைக்க வேண்டும். | இந்த காணியை மதிப்பீடு செய்து உரிய தொகையை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் நிலுவை கடை வாடகை மீதியானது ரூபா 1,527,075 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 1,334,875 | பட்டோலைகள் மற்றும் கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இன்றளவில் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்படுகின்றமையால், எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாது. |

| | | | |
|---|---|---|---|
| | ஆனமையால் ரூபா 192,200 ஆன இணக்கமின்மைகள் நிலவின. | | |
| (ii) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 31 ஆந் திகதியில் உள்ளபடியான வீதவரி பதிவேடுகளின் பிரகாரம் வீதவரி வருமானம் ரூபா 136,398 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலைகளின் பிரகாரம் அந்த மீதி ரூபா 422,203 ஆனமையால் ரூபா 285,805 ஆன இணக்கமின்மையொன்று நிலவியது. | பட்டோலைகள் மற்றும் கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இன்றளவில் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்படுகின்றமையால், எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாது. |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 457,284,175 கூட்டுத்தொகையான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேடு ஆரம்பிக்கப்பட்டிராததுடன், இன்றளவில் அந்த பதிவேடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

## 1.4 இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | மா நகர சபைகள் கட்டளைச் சட்டம். | | | |
| (i) | 247(அ) பிரிவு | மா நகர சபைகள் அதிகாரப் பிரதேசத்தினுள் | கட்டணங்கள் அறவிடப்பட | ஏற்றுக்கொள்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அபிவிருத்தி சபையின் பதிவு செய்யப்ட்ட 13 ஹோட்டல்களில் மீளாய்வாண்டிற்கான கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | |
| (ii) | 272 ஆம் பிரிவு | பொலன்னறுவை மா நகர சபையினால் அனுராதபுரம் மா நகர சபைக்குரிய உப விதிகள் பின்பற்றப்பட்டுள்ள போதிலும், அவற்றை வர்த்தமானிப்படுத்த இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் காலங்களில் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |
| **(ஆ)** | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) | பணி நிறைவடைந்து 10 நாட்களினுள் பெற்றுக்கொண்ட முற்பணத் தொகை தீர்க்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 11 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா முற்பணங்கள் 1 முதல் 6 ½ மாதங்கள் வரையான காலவீச்சில் தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது. | தாமதமின்றி முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனைத்து பிரிவுத் தலைவர்களுக்கும் அறிவித்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | நி.பி. 570(ஆ) | வைப்புச் செய்யப்பட்ட நாள் முதல் 5 வருடங்கள் முதல் 8 நாட்கள் வரையான காலம் கடந்துள்ள உரித்து கோரப்படாத தொழிற்சாலை வைப்புகள் ரூபா 319,292 இனை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி. பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 19,242 ஆன தொகை நகர பொறியியலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் உரிய நிறுவனத்திற்கு வழங்குவதற்கும், பரிந்துரை வழங்கப்பட முடியாத பிடிகாசினை நிர்மாணங்களின் குறைபாடுகளை நிவர்த்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | செய்வதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | நி.பி. 571 மற்றும் 572 | வைப்புச் செய்யப்பட்டு 02 முதல் 06 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்துள்ள ரூபா 159,878 பெறுமதியான பொது வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி. பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (iv) | நி.பி. 756 | 2019 மே 24 ஆந் திகதி வரையிலும் 2018 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளுக்கான பொருள் மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | | மதிப்பாய்வு சபையினால் மெய்மையாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| (இ) | 1989 சனவரி 20 ஆந் திகதிய இலக்கம் 541/17 கொண்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட உப விதி II பகுதி<br>--------------------------------<br>2(3)(1) ஆம் பந்தி | விளம்பர அறிவித்தல்களை கண்காட்சிப்படுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்திற்காக பணம் செலுத்துவதற்கு முன்னர் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | கட்டணங்கள் அறவிடப்பட்டு அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| **(ஈ)** | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம்<br>--------------------------------<br>23(அ) பிரிவு | சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் | காலாவதியான சுற்றாடல் | ஏற்றுக்கொள்கின்றேன். திருத்துவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காலாவதியாகிய 36 தொழிற்சாலைகளுக்காக புதிய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரங்கள் இனங்காணப்பட்டு அவற்றை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| **(உ)** | 2018 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய இலக்கம் 2086/15 கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விசேட வர்த்தமானி அறிவித்தல். | | | |
| (i) | கட்டளை இலக்கம் 1.1 | நகர முதல்வரால் பயன்படுத்தப்பட்ட ஜீப் வண்டிக்கு மீளாய்வாண்டின் ஒக்தோபர் மற்றும் திசெம்பர் மாதங்களில் எல்லையினை மிகைத்து 239 லீட்டர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டு ரூபா 30,959 தொகை செலவிடப்பட்டிருந்தது. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ii) | கட்டளை இலக்கம் 4.II | பிரதி நகர முதல்வருக்குரிய ரூபா 2,500 மாதாந்த வீட்டு தொலைபேசி படிகளை விஞ்சி ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரையிலும் மாதமொன்றிற்கு ரூபா 2,500 படி ரூபா 12,500 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

## 1.5 பெற வேண்டியகணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் பெற வேண்டிய கணக்கு | இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | எதிர்வரும் காலங்களில் அந்த பணத்தை |

| | | | |
|---|---|---|---|
| | மீதிகளாக காண்பிக்கப்பட்டிருந்த அறவிடப்பட வேண்டிய பணிகளுக்காக ரூபா 2,699,839 தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் போது பொலன்னறுவை வாரச்சந்தையை குத்தகைக்கு விடுவதன் மூலம் அறவிடப்பட வேண்டிய 45,000 ஆன நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை பகிர்ந்தளிக்கும் பரிந்துரை மூலம் அந்த மீதி பொது திறைசேரிக்கு உரியதென்பதால் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2016 ஆம் ஆண்டின் போது சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதன் கீழ் தமன்கடுவ பிரதேச சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளமையால் அறவிடல்கள் தொடர்பில் பொலன்னறுவை மா நகர சபைக்கு சட்டரீதியான ஏற்பாடு இல்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 மார்ச் 20 ஆந் திகதி முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கான மா நகர சபையின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 5,017,287 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

2018 ஆம் ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 13,314,393 | 7,703,568 | 11,748,287 | 13,040,325 |
| (ii) | வாடகை | 27,303,475 | 5,106,092 | 15,082,621 | 1,517,694 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,657,500 | 2,657,500 | 1,479,685 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 18,836,978 | 2,313,371 | 6,116,112 | 32,305,651 |
| | மொத்தம் | 62,112,346 | 17,780,531 | 34,426,705 | 46,863,670 |

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வு காலப்பகுதிக்காக சபையினால் ரூபா 62,112,346 ஆன வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், அவற்றுள் பட்டியலிடப்பட்டிருந்தது ரூபா 17,780,531 மாத்திரமாகும். சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 34,426,705 ஆகும். | வருமான மதிப்பீடுகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த வருடத்தில் வருமானங்களை சேகரிப்பதற்கான பொருத்தமான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி பதிவேட்டின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரித் தொகை ரூபா 12,746,949 ஆக உள்ளதுடன், அந்த வரித்தொகையை அறவிடுவதற்கு போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அறவிடப்பட வேண்டிய நிலுவை கழிவு வரித் தொகை ரூபா 2,397,000 மற்றும் நிலுவை களியாட்ட வரியானது ரூபா 293,375 ஆக உள்ளதுடன், அந்த வரித்தொகையை அறவிடுவதற்கு போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (இ) | குப்பை வரியை அறவிடக்கூடிய வணிகங்கள் மற்றும் கைத்தொழில்கள் பொருந்தொகையானவை காணப்பட்ட போதிலும், மீளாய்வு காலப்பகுதிக்காக 99 நிறுவனங்களிடமிருந்து மாத்திரமே குப்பை வரி அறவிடப்பட்டிருந்தது. | குப்பை வரியை அறவிடக்கூடிய அனைத்து நிறுவனங்களிடமிருந்தும் வரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**2.2.4 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மருத்துவமனையின் முன்னால் அமைந்துள்ள வாகனத் தரிப்பிடத்தில் நாளாந்தம் அறவிடப்படும் வாடகை வருமானம் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமான நடைமுறைக்கமைய நாளாந்தம் சேகரிக்கப்படும் வருமானத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ஆ) | 2018 ஆகஸ்ட் 25 ஆந் திகதி முதல் பொலன்னறுவை பொது மருத்துவமனையின் முன்னால் உள்ள வாகனத் தரிப்பிடத்தில் பணம் அறவிடுவதற்காக பற்றுச்சீட்டு புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | பணம் அறவிடும் போது பற்றுச்சீட்டு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (இ) | மா நகர சபைக்கு சொந்தமான 208 கடைகளில் பெரும்பாலான கடைகள் உடன்படிக்கை கைச்சாத்திட்டவர்களால் இடைக் குத்தகைக்கு வழங்கியமையால், தற்போதைய மதிப்பீட்டு பெறுமதியை விட அதிகமான வருமானம் ஈட்டுகின்றமையால், உடன்படிக்கைகளை நாளதுவரையாக்கி உரிய தரப்பினரிடமிருந்து வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கால அடிப்படையில் உடன்படிக்கைகள் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ஈ) | மருத்துவனை சந்தியின் புதிய வர்த்தக தொகுதியின் இலக்கம் 23 கொண்ட கடை, தரைத்தளத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை மற்றும் மேல் தளத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2019 மார்ச் 28 ஆந் திகதி வரையிலும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | உரிய முறையில் குத்தகையாளர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| | 2018 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

பொலன்னறுவை மா நகர சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா 1,334,875 மற்றும் நிலுவை சொத்துக்களை குத்தகைக்கு வழங்கல் வருமானம் ரூபா 41,249 ஆக இருந்ததுடன், அந்த வரித் தொகைகளை அறவிடுவதற்கு போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வு காலப்பகுதிக்காக மா நகர சபையின் அதிகாரப்பிரதேசத்தினுள் மேற்கொள்ளப்பட்ட விளம்பர அறிவித்தல் பலகைகள் தொடர்பான மதிப்பாய்வுகளின் பிரகாரம் 21 எண்ணிக்கையான பாரிய அளவிலான அறிவித்தல் பலகைகளில் அறவிடக்கூடியதாக இருந்த வருமானம் ரூபா 3,391,750 ஆகும். | வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

### 2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்தும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,128,161 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 28,770,490 ஆகும். | பெற வேண்டிய வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயல்நடவடிக்கை திட்டம்**

| | | |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் மா நகர சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளுக்காக மீளாய்வு காலப்பகுதிக்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் செயல்நடவடிக்கை த் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கிடைத்த ரூபா 956,082 ஆன தொகை 02 முதல் 04 வருடங்கள் வரையான காலம் கடந்துள்ள போதிலும், குறித்த நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபடுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கிடைத்த நிதிகளை நோக்காக கொண்ட பணிகளை இனங்கண்டு ஈடுபடுத்த வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (இ) | மா நகர சபையின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபயொன சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பதவியணி 217 ஆன போதிலும், அவற்றுள் எழுத்து மூலம் கடமை கையளிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 38 மாத்திரம் ஆகும். | அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எழுத்து மூலம் கடமை கையளிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **ஊழிய வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| (i) | 2018 மார்ச் 19 ஆந் திகதி பொலன்னறுவை மா நகர சபையினை தாபிக்கும் போது தமன்கடுவ பிரதேச சபையில் சேவையாற்றிய பதவியணியின் 93 பேர் பொலன்னறுவை மா நகர சபைக்கு உள்ளீர்க்கப்பட்டிருந்ததுடன், அதற்குரிய நியமனக் கடிதங்கள் 2019 மார்ச் 21 ஆந் திகதி கணக்காய்வு தினம் வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நியமனக் கடிதங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ii) | மா நகர சபையில் 41 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலான வெற்றிடங்கள் மற்றும் 26 அங்கீகரிக்கப்படாத பதவியணியிலான மிகையும் நிலவியது. | போதியளவான பதவியணியை அங்கீகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| **(ஆ)** | **ஊழியர் பிணை** | | |
| (i) | பிரதம செயலாளரின் என்சீபீ/சீஏ/ஈசீ/3/17 மற்றும் 1999 நவம்பர் 3 ஆந் திகதிய 4/1999 ஆம் இலக்க நிறுவனச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 880 மற்றும் 881 இன் பிரகாரம் மா நகர சபையில் பிணை வைப்புச் செய்ய வேண்டிய ஐந்து உத்தியோகத்தர்கள் நீங்கலாக ஏனைய உத்தியோகத்தர்கள் பிணை வைப்புச் செய்திருக்கவில்லை. | ஊழியர் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**3.4 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நவநகரய வாரச்சந்தையின் வருமானம் சேகரிக்கும் 18 சந்தர்ப்பங்களில் தளத்தில் சேகரிக்கப்பட்ட ரூபா 118,075 ஆன வருமானத்தினை அலுவலகத்திற்கு கையளிப்பதற்கு 02 முதல் 17 நாட்கள் | சேகரித்த தினத்தின் அடுத்த அலுவலக நாளில் பணத்தை பெற்றுக்கொள்ள | ஏற்றுக்கொள்கின்றேன். |

| | | |
|---|---|---|
| வரையான கால தாமதம் ஏற்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 4,830,000 பெறுமதியான விளைவற்ற சொத்துக்கள் Magic BIO KUN TECH – 500 – A1 இயந்திரம், பர்னர் இயந்திரம் மற்றும் கிரஷர் இயந்திரமொன்று விளைவற்று காணப்பட்டதுடன், காலம் தொடர்பான சான்றொன்றினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | சொத்துக்களின் முழுமையான பயன்பாட்டிற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | பராமரிப்பு செலவினம் அதிகரித்தமை மற்றும் பயிற்சிபெற்ற ஊழியர்கள் இல்லாதிருந்தமை ஆகியவற்றின் அடிப்படையில் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. |

### 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிபிதெமு பொலன்னறுவை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அச்சுக் கற்கள் பதிக்கப்பட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது அச்சுக்கற்களை விநியோகித்தல் பெறுகை நடைமுறையினூடாக மேற்கொள்ளப்பட வேண்டும் என பொலன்னறுவை மாவட்ட செயலாளரின் 2018 யூலை 24 ஆந் திகதிய DPSD010/உள்ளூராட்சி நிறுவனம்/2018 Project கடிதத்தின் மூலம் பொலன்னறுவை மா நகர சபைக்கு அறிவித்துள்ள போதிலும் அதற்கமைய செயற்படாமையால் விநியோகிக்கப்பட்ட 307,292 அச்சுக்கற்களுக்காக ரூபா 1,843,752 மிகைச் செலவினமொன்று இடம்பெற்றிருந்தது. | உரிய கடித்தின் பிரகாரம் அரசிற்கு உச்ச நலன் கிடைக்கும் வகையில் செயற்திட்டம் நடைமுறைப்படுத் தப்பட வேண்டும். | பொலன்னறுவை மாவட்ட செயலாளரின் 2018 யூலை 24 ஆந் திகதிய கடிதம் மா நகர சபைக்கு கிடைக்கவில்லை. |

**3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 2086/15 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மா நகர சபையின் பங்குபற்றுவோருக்காக போக்குவரத்து படியினை செலுத்துவதற்காக அறிவுரை இல்லாத போது மீளாய்வாண்டின் ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரையிலும் மாதமொன்றிற்கு ரூபா 176,000 ஆன போக்குவரத்துப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரமின்றி படிகளை செலுத்த நடவடிக்கை எடுக்க கூடாது. | செலுத்தியுள்ள போக்குவரத்து படியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரதி நகர ஆணையாளருக்கு உத்தியோகபூர்வ பயணங்களுக்காக எரிபொருள் செலவினம் சபையின் நிதியத்தினால் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிராத போது பிரதி நகர ஆணையாளருக்கு தனிப்பட்ட வாகனத்திற்காக மாதமொன்றிற்கு 200 லீட்டர் டீசல் படியாக வழங்குவதற்காக ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரையிலும், ரூபா 112,680 செலுத்தப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரமின்றி படிகளை செலுத்த நடவடிக்கை எடுக்க கூடாது. | ஏற்றுக்கொள்கினறேன். அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**3.8 பெறுகைகள்**

**பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் பெறுகை பணிகளை நிறைவெற்றுவதற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை பணிகளை நிறைவெற்றுவதற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | முறைமைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்கீட்டு காலப்பகுதிக்காக பொலன்னறுவை மா நகர சபையின் போதியளவான உள்ளக கணக்காய்வொன்று இடம்பெற்றிராததுடன், நிதிப்பிரமாணம் 134(3) இன் பிரகாரம் உள்ளக கணகடகாய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கணக்காய்விற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வட மத்திய பிரதான செயலாளரின் என்சீபீ/சீஏ/01 ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் 2016 மே 11 ஆந் திகதிய கடித்தின் மூலம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது ஒவ்வொரு 02 மாதங்களுக்கு ஒரு தடவையும் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கால அடிப்படையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் உரிய முறையில் நடாத்தப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் கால அடிப்படையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |